1976 ஆம் ஆண்டில் ஆறுவது ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதாக கருதப்பட்ட சுற்றுலாத்துறை, 1977 ஆம் ஆண்டில் ஐந்தாவது இடத்தைப்பெற்று 1978 1979ஆம் ஆண்டுகளில் தொடர்ந்தும் ஐந்தாவது இடத்திலேயே இருந்தது. 1980 ஆம் ஆண்டில் சுற்றுலா வருவாய்கள் தெங்கு உற்பத்திகள் மூலம் பெறப்பட்ட வருவாய்களைவிட அதிகரித்து இலங்கையின் நாலாவது ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் இடத்தினைப்பெற்றது. சென்மதி நிலுவைத்தரவுகள் சுற்றுலா மூலம் பெறப்படும் வருவாய்களின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தைஎடுத்துக்காட்டுகின்றது. 1975 ஆம் ஆண்டில் பணிகள்மூலம் பெறப்பட்ட பெறுகைகளில் 22 சதவீதம் சுற்றுலாவின் மூலம் பெறப்பட்டிருந்த வேளையில் 1979 ஆம் ஆண்டில் இது 35 சதவீதமாக அதிகரித்து 1980 ஆம் ஆண்டில் மாற்றமுறுது விளங்கியது.

தொழில் செறிவுடைய கைத்தொழிலாக நோக்குமிடத்து சுற்றுலா அதே துறையில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் அதே வேளையில் மறைமுகமாக தொடர்புடைய துறைகளிலும் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தியது. கடந்த பத்தாண்டுகாலப்பகுதியில் தொழில்வாய்ப்பினை வழங்கவேண்டும் என்ற அரசின் முயற்சிக்கு சுற்றுலாசாதகமான முறையில் உதவியுள்ளது. 1980 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையால் உருவாக்கப்பட்ட நேரடியான தொழில்வாய்ப்பு 1979 ஆம் ஆண்டின் 18,472 இல் இருந்து 22,561 ஆக உயர்ந்து 22 சதவீதம் கொண்ட ஆண்டுக்கான அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 1980 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மறைமுகமான தொழில்வாய்ப்புக்கள் 30,457 ஆக மதிப்பிடப்பட்டு 1979 ஆம் ஆண்டினைவிட 22 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது. இதன் விளைவாக மொத்த தொழில்வாய்ப்புக்கள் 53,018 ஆக விளங்கி வருகை தந்த ஒவ்வொரு 6.1 சுறறுலாப்பயணிகட்கு ஒரு தொழில்வாய்ப்பு ஏற்பட்டதாகக் கருதலாம்.

சுற்றுலா ஒரு துறையாக கணிக்கப்பட்டு பெருமளவில் தாராளமான வரி ஊக்குவிப்புக்களைப் பெற்றிருந்தது. 1980 ஆம் ஆண்டு வரையில் மொத்த மூலதன முதலீடுகள் ரூ. 8,880 இலட்சங்களாக விளங்கியவிடத்து இதில் 77 சதவீதம் உள்நாட்டுச் செலவுகளாகவும் மிகுதி 23 சதவீதம் வெளிநாட்டுக் கூறுகளாகவும் காணப்பட்டன.

## சென்மதி நிலுவை

இறக்குமதிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டமையும், பண்ட வர்த்தக மாற்று வீதத்தில் மேலுமொரு வீழ்ச்சி ஏற்பட்டமையும், பண்டக்கணக்கு நடைமுறைக்கணக்கு மீதான குறைகள் பெருமளவில் விரிவடைந்தமையும், வெளிநாட்டுச் சொத்துக்களில் காணப்பட்ட கணிசமானஅளவு வீழ்ச்சியும், இலங்கை ரூபா பெரும்பான்மை முதன்மை நாணயங்களுக்கெதிராக அதன் மதிப்பு குறைவுற்றமை என்பன 1980 ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் காணப்பட்ட முதன்மைப் பண்புகளாகும்.

பல ஆண்டுகளின் நிறைவற்ற செயலாற்றத்தின் பின்னர், 1977 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவை, பண்ட, நடைமுறைக் கணக்குகளில் மிதமான ஆயினும் வரவேற்கத்தக்க மிகையுடன் சாதகமானதொரு நிலைக்குத் திரும்பியது. அன்று தொடக்கம் நடைமுறை, பண்ட கணக்குகள் தொடர்ந்து படிப்படியாக அதிகரித்துச் செல்லும் குறையினைப் பதிவுசெய்து வந்தமையால் சென்மதி நிலுவையானது மீண்டும் பாதகமான நிலைக்குத் திரும்பியது. 1980ஆம் ஆண்டில் பண்டக்

## சென்மதி நிலுவை

ஆண்டு தோறும்




இலங்கை மத்திய வங்கி

குறை, ரூ. 161,400 இலட்சமாக (சிஎஉ 7,500 இலட்சம்) மிகக்கூடியதொரு தொகை பதியப்பட்டதோடு முன்னைய ஆண்டின் ரூ. 72,880 இலட்சம் (சிஎஉ 3,620 இலட்சம்) கொண்ட வீழ்ச்சியுடனும் விளங்கியது. முன்னைய ஆண்டினைவிட பணிகள் மாற்றல்கள், கணக்குகள், பெருமளவு மிகையைக் காட்டுகின்றபோதிலும் விரிவுற்ற பண்டக்குறை, நடைமுறைக்கணக்குக் குறை சமமான மீதியொன்றைப் பிரதிபலித்து நின்றது.

1980இல் நடைமுறைக் கணக்குக் குறை ரூ. 107,390 இலட்சமாக (சிஎஉ 4,990 இலட்சம்) மீண்டும் முன்னெப்போதும் பதியப்படாத அளவில் அதிகரித்துக் காணப்பட்டது. ஒப்பிடுகையில் 1979 இல் நடைமுறைக் கணக்குக்குறை ரூ. 35,560 இலட்சம் (சிஎஉ 1,770 இலட்சம்) ஆகும். 1980 இல் நாணயமல்லா தேறியமூலதனப் பெறுகைகள் தனியொரு ஆண்டில் பெறப்படாத அளவில் ரூ. 74,460 இலட்சமாக (சிஎஉ 3,460 இலட்சம் காணப்பட்டபோதிலும் இவை குறையை முற்றாக நிதிப்படுத்தப் போதுமானதாக இருக்கவில்லை. இவ்வாறு இவ்வாண்டு முடிவடையும் வேளையில் மொத்த நிலுவையில் ரூ. 29,670 இலட்சம் (சிஎஉ 1,660 இலட்சம்) கொண்ட குறையும் ஒதுக்குகளின் இழப்பும் காணப்பட்டது. மொத்தத்தில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 28,860 இலட்சத்தாலும் (சிஎஉ ரூ. 1,790 இலட்சம்) தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் ரூ. 29,670 இலட்சத்தாலும் (சிஎஉ 1660 இலட்சம்) வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டன இது பெரும்பான்மை முதன்மை நாணயங்களுக்கு, அதாவது இலங்கை ரூபாவின் செலாவணி மாற்று வீதத்தை குறிப்பாக ஆண்டின் இரண்டாவது பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் பெறுமதியில் வீழ்ச்சியடையச்செய்தது.

ஒரு நாடு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கில் குறைகள் ஏற்படுவது புதிய தொன்றல்ல. உண்மையில், அத்தகைய குறைகள் வாயிலாக வெளிநாட்டு மூலவளங்கள் பொருளாதாரத்திற்குள் ஈர்க்கப்பட்டுள்ளன. இக்கருத்தில் நோக்கின் 1978, 1979 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட குறைகள் தனியே பாதகமானது எனக் கருதமுடியாது. உண்மையில், இவ்வாண்டுக்காலப்பகுதியில் நடைமுறைக் கணக்கு குறையினை நிதியிடுவதற்கு நாடு தேவையான வெளிநாட்டு மூலவளங்களைத் திரட்ட முடிந்ததுடன் நிலுவை வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புக்கு பெருமளவு காரணமாகவிளங்கியது. மறுபுறத்தில், 1980இல் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட அபிவிருத்திகள், வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து திரட்டப்பட்ட மூலவளங்கள் நடைமுறைக் கணக்கு குறையின் ஒரு பகுதியை மட்டும் நிதியிடப் போதுமானதாக இருந்தது. இது கணிசமான ஒரு தொகையை திரண்ட ஒதுக்குகளிலிருந்து நிதியிடுவதற்கு வழிவகுத்ததுடன் நாட்டினை வெளிநாட்டுச்செலாவணி நிலைமையில் தளர்ச்சியுற்றதொரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

1980 இல் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 177,110 இலட்சமாக (சிஎஉ 8,230 இலட்சம்) விளங்கி 1979 ஆம் ஆண்டைக்காட்டிலும், 12 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பொன்றையே காட்டியது. 1980 இல் ஏற்றுமதி வருவாய்களின் மிதமான அபிவிருத்திக்கு அதிகரித்த விலைகளே காரணமாகும். உண்மையில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் தொடர்ந்தும் மாற்றமுறாதிருந்த வேளையில் ஏற்றுமதி விலைச்சுட்டெண் 15 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பொன்றைக் கொண்டு விளங்கியது.

மொத்த இறக்குமதிகள் ரூ. 338,510 இலட்சமாக (சிஎஉ 15,730 இலட்சம்) அமைந்தது. இது 1979 ஆம் ஆண்டின் பெறுமதியினைக்காட்டிலும் 40 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். ஏற்கனவே அவதானிக்கப்பட்டதற்கமைய இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்புக்களினால் இவ்வதிகரிப்பின் பெரும் பகுதி வர்த்தகத்துறை சார்ந்ததாகவே இருந்தது. அத்துடன் 1980 இல் இறக்குமதிகளின்விலைச்சுட்டெண் 43 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் இறக்குமதிகளின் அளவில் மிதமானதொரு அதிகரிப்பு காணப்பட்டதோடு இறக்குமதி அளவுச்சுட்டெணில் 13 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பும் 1980ஆம் ஆண்டில் காணப்பட்டது. இறக்குமதி அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு பெருமளவில் முதலீட்டு அல்லது மூலதன இடைநிலைப் பொருட்களிலேயே ஏற்பட்டிருந்ததெனலாம்.

அட்டவணை 1.27

## சென்மதி நிலுவை—பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1976 - 1980

| விடயங்கள் | பத்து இலட்சம் ரூபாய்களில் 1976 | 1977 | 1978 | 1979 | 1980* | சி. எ. உ. பத்து இலட்சங்களில் 1976 | 1977 | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள் ... | — 709 | + 350 | —2,393 | —7,288 | -16,140 | — 73 | + 29 | — 144 | — 362 | — 750 |
| ஏற்றுமதிகள் (க.எ.பெ.) ... | 4,707 | 6,640 | 13,207 | 15,282 | 17,711 | 484 | 651 | 675 | 759 | 823 |
| இறக்குமதிகள் (கொ.க.க.) | — 5416 | —6,290 | -15,600 | -22,570 | -33,851 | — 557 | — 622 | — 819 | —1,121 | —1,573 |
| 2. பணிகள் ... | + 112 | + 304 | + 119 | + 740 | + 861 | + 12 | + 29 | + 6 | + 37 | + 40 |
| பெறுகைகள் .. | 643 | 923 | 1,942 | 2,993 | 4,605 | 66 | 89 | 99 | 149 | 214 |
| கொடுப்பனவுகள் ... | — 531 | — 619 | —1,823 | —2,253 | —3,744 | — 54 | — 60 | — 93 | — 112 | — 174 |
| 3. பொருட்களும், பணிகளும் (1+2).. | — 597 | + 654 | —2,274 | —6,549 | -15,279 | — 61 | + 58 | — 138 | — 325 | — 710 |
| 4. மாற்றல்கள் ... | 547 | 612 | 1,242 | 2,993 | 4,540 | 56 | 59 | 63 | 148 | 211 |
| தனியார் .. | 56 | 122 | 342 | 754 | 2.260 | 6 | 12 | 17 | 37 | 105 |
| அலுவல்சார்ந்த .. | 491 | 490 | 900 | 2,239 | 2,281 | 50 | 47 | 46 | 111 | 106 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை | — 50 | +1,266 | —1,032 | —3,556 | -10,739 | — 5 | + 117 | — 75 | — 177 | — 499 |
| 6. நாணயமல்லா மூலதனம் .. | 591 | 326 | 2,600 | 3,306 | 7,446 | 61 | 32 | 133 | 164 | 346 |
| தனியார் துறை ... | — 109 | — 127 | 145 | 874 | 4,153 | — 11 | — 12 | 8 | 43 | 193 |
| அரச துறை ... | 700 | 453 | 2,455 | 2,432 | 3,293 | 72 | 44 | 125 | 121 | 153 |
| நீண்டகால (தேறிய) ... | 659 | 602 | 2,609 | 2,432 | 3,293 | 68 | 58 | 133 | 121 | 153 |
| பெறுகைகள் | (1,244) | (1,319) | (3680) | (3,351) | (4,326) | (128) | (127) | (188) | (167) | (201) |
| கடன் தீர்ப்பனவுகள் ... | (— 585) | (— 717) | (—1,071) | (—919) | (-1,033) | (— 60) | (— 69) | (— 55) | (— 46) | (— 48) |
| குறுகியகால (தேறிய) | 41 | — 149 | — 154 | — | — | 4 | — 14 | — 8 | — | — |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | — | 1,680 | 344 | — 18 | + 919 | — | — | — | — | — |
| 8. பிழைகளும், தவிர்ப்புக்களும் ... | — 10 | + 41 | — 50 | + 820 | 851 | 7 | 4 | 7 | 36 | — 25 |
| 9. சி. எ. உ. ஒதுக்கீடு ... | — | — | — | 241 | 258 | — | — | — | 12 | 12 |
| 10. திரண்ட நிலுவை ... | 531 | 3,313 | 1.861 | 793 | —2,967 | 49 | 153 | 65 | 35 | — 166 |
| 11. நாணய அசைவுகள் (—மிகை) ... | — 531 | —3,313 | —1,861 | — 793 | +2,967 | — 49 | — 153 | — 65 | — 35 | + 166 |
| மாற்றல்வீதம்-இ.ரூ. / சி.எ.உ. (ஆண்டுச் சராசரி) ... | | | | | | 9.73 | 10.42 | 19.58 | 20.13 | 21.52 |

* தற்காலிகம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு : நடைமுறைக் கணக்கில் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் நாணயமல்லாத் துறையின் அசைவுகளும் ஆண்டு சராசரி அளவுகளில் மாற்றப்பட்டுள்ளன. நாணய அசைவுகள் ஆண்டு இறுதிக்காலப்பகுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. 1977ஆம் ஆண்டு தொடக்கம் பொருட்கள் பணிகள் துறையினது எல்லா மாற்றல்களும், தனியார், அலுவல்சார் (நடைமுறைக் கணக்கு மாற்றல்கள்) மாற்றல்களும், நாணயமல்லாத் துறையின் மாற்றல்களும் நான்கு காலாண்டுகளின் மொத்த மாற்றுத்தொகையைக் கொண்டுள்ளன. இவைகள் ஆண்டுச் சராசரி வீத மாற்றங்களுடன் பொருந்துவனவாக அமையா.

சென்மதி நிலுவையின் பணிகள் துறை தொடர்ந்தும் விரிவாக்கத்தினைக் காட்டியதுடன் மொத்தப் பெறுகைகளின் அதிகரிப்பும், 1979இல் ரூ. 29 930 இலட்சத் (சிஎஉ 1,480 இலட்சம்) திலிருந்து 1980இல் ரூ. 46,050 இலட்சமாக (சிஎஉ 2,140 இலட்சம்) காணப்பட்டது. ஆயினும் கடன்கள் மீதான வட்டி, பணிகளை ஒட்டிய கட்டணங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் மற்றும் ஏனைய குறுங்கால எடுப்பனவுகள் காரணமாக ஏற்பட்ட கொடுப்பனவுகளினால் கூடுதலான தேறிய மிகையின் அதிகரிப்பும் 1979 இன் ரூ. 7,400 இலட்சத் (சிஎஉ 360 இலட்சம்) திலிருந்து 1980 இல் ரூ. 8,610 (சிஎஉ 400 இலட்சம்) இலட்சமாக சிறிதளவில் அதிகரித்தது. மாற்றல்களிலிருந்தான தேறிய பெறுகைகள் 1976 இலிருந்து அவதானிக்கப்பட்டதற்கமைய வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையரால் அனுப்பப்பட்ட உள்முக பண அனுப்பல்களின் காரணமாக தனியார் மாற்றல்கள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் 1980 இல் தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல்களின் மிகையில் ரூ. 45,490 இலட்சம் (சிஎஉ 2,110 இலட்சம்) கொண்ட அதிகரிப்பு ஏற்படக்காரணமாயிற்று. இத்தொகையில் தனியார் மாற்றல்களிலிருந்தான தேறிய பெறுகைகளின் அளவு 1979 இன் ரூ. 7,540 இலட்சத் (சிஎஉ 370 இலட்சம்) திலிருந்து 1980இல் ரூ. 22,600 இலட்சமாக (சிஎஉ 1,050 இலட்சம்) கணிசமானளவு அதிகரித்து 184 சதவீத அதிகரிப்பைப்பதிவு செய்தது. பணிகள் துறை தனியார்துறை மற்றும் அலுவல்சார் மாற்றல்கள் என்பவற்றுக்கான தேறிய மிகை அதிகரிப்பு நடைமுறை நிலுவையை ரூ. 107,390 இலட்சமாக (சிஎஉ 4,990 இலட்சம்) குறைத்தது.

அட்டவணை 1.28

**பணிகளும் மாற்றல்களும் — 1979 - 1980**

பத்து இலட்சம் ரூபாய்களில் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயம் | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1979/80 மாற்றம் | 1979 | 1980 | 19779/80 மாற்றம் | 1979 | 1980 |
| துறை, போக்குவரத்து, காப்புறுதி ... | 445 (22) | 725 (34) | + 280 (+ 12) | 404 (20) | 560 (26) | + 156 (+ 6) | + 41 (+ 2) | + 165 (+ 8) |
| பயணம் ... | 1,053 (52) | 1,637 (76) | + 584 (+ 24) | 458 (23) | 556 (26) | + 98 (+ 3) | + 595 (+ 29) | + 1.081 (+ 50) |
| முதலீட்டு வருவாய் .. | 615 (30) | 774 (36) | + 159 (+ 6) | 854 (42) | 1,205 (56) | + 351 (+ 14) | — 240 (— 12) | — 447 (— 20) |
| 1. இலாபமும் பங்கிலாபமும் ... | — (—) | — (—) | — (—) | 98 (5) | 237 (11) | + 130 (+ 6) | — 98 (— 5) | — 235 (— 11) |
| 2. வட்டி ... ... | 615 (30) | 774 (36) | + 159 (+ 6) | 756 (37) | 968 (45) | + 212 (+ 8) | — 142 (— 7) | — 212 (— 9) |
| அரச செலவினம் ... | 120 (6) | 128 (6) | + 8 (—) | 81 (4) | 129 (6) | + 48 (+ 2) | + 39 (+ 2) | + 5 ( — ) |
| பல்லினவகை ... | 760 (38) | 1,341 (62) | + 581 (+ 24) | 455 (23) | 1,294 (60) | + 836 (+ 37) | + 304 (+ 15) | + 26 (+ 1) |
| மொத்தப் பணிகள் .. | 2.993 (148) | 4,605 (214) | + 1,612 (+ 662) | 2253 (112) | 3,744 (174) | +1,491 (+ 62) | + 739 (+ 37) | + 860 (+ 40) |
| தனியார் மாற்றல்கள் .. | 935 (46) | 2,518 (117) | + 1,583 (+ 71) | 181 (9) | 258 (12) | + 77 (+ 3) | + 754 (+ 37) | +2,260 (+ 105) |
| அலுவல்சார் மாற்றல்கள் ... | 2.239 (111) | 2 281 (106) | + 42 (— 5) | — — | — — | — — | +2,239 (+ 111) | + 2,181 (106) |
| மொத்த மாற்றல்கள் .. | 3,174 (157) | 4,799 (223) | +1,642 (+ 66) | 181 (9) | 258 (12) | + 77 (+ 3) | +2,993 (— 148) | +4,541 (+ 211) |
| மொத்தப் பணிகளும் மாற்றல்களும் . | 6,167 (305) | 9,404 (437) | +3,237 (+1,132) | 2,434 (121) | 4,002 (186) | +1,568 (+ 66) | + 3,732 (184) | +5,401 (251) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பணிகள் மீதான மொத்த வருவாய் 1979 இன் ரூ. 29,930 இலட்சத் (சிஎஉ 1480 இலட்சம்) திலிருந்து 1980 இல் ரூ. 46,050 இலட்சமாக (சிஎஉ 2,140 இலட்சம்) (44 சதவீதமான) வலுவான அதிகரிப்பொன்றைக் கொண்டிருந்த போதும் இது ரூ. 22,530 இலட்சத் (சிஎஉ 1,120 இலட்சம்) திலிருந்து 1980 இல் ரூ. 37,450 இலட்சமாக (சிஎஉ 1,740 இலட்சம்) மாற்றங்கள் மூலமாக வளர்ச்சிவீதம் (55 சதவீதம்) உயர்ந்தளவில் காணப்பட்டமையால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. வளர்ச்சியின் பெரும்பகுதியினை சுற்றுலாவிலிருந்தான (பயணம்) வருவாய்கள் கலத்துறைப் போக்குவரத்து, காப்புறுதி என்பன பெரும் உயர்ச்சியினைக் கொண்டிருந்த துறைகளாக விளங்கிய வேளையில் வட்டிகளின் கணிசமான அளவு உயர்வுகள், கடன்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான கொடுகடன் வகைகள் பொறுத்து அமைந்த கொண்டு நடாத்துதல் கட்டணங்கள், குறுகிய காலக்கடன்கள் (முதலீட்டு வருவாய் கொடுப்பனவுகள்) வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்ப பணிகள், சட்டங்கள், ஒப்பந்தக் கட்டணங்கள் மற்றும் ஆய்வு செயற்றிட்ட ஆய்வுகள் கட்டணங்கள் உள்ளடங்க பல்லினப் பணிகளைப் பொறுத்து வெளி அனுப்பல்கள் ஆகி. வற்றின் கொடுப்பனவுகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன.

1976 இலிருந்து அவதானிக்கப்பட்டிருந்ததற்கமைய வெளிநாட்டுப் பண உள் வருகை அல்லது வெளிநாட்டிலிருந்தான தனியார் மாற்றல்கள் தொடர்ந்தும் வலுவான வளர்ச்சியைக் காட்டி நின்றன. இப்பண உள் அனுப்பல்களின் கணிசமானதொரு பகுதி வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையரின் மாற்றல்களைப் பிரதிபலித்திருந்தது. 1976இல் ரூ. 1,090 இலட்சத்தைக் கொண்டிருந்த மொத்த தனியார் பண உள் அனுப்பல்கள் 1980இல் ரூ. 25,180 இலட்சம் அல்லது சிஎஉ 1,170 இலட்சங்கொண்ட என்றுமில்லாததொரு மட்டத்தினை அடைந்தது. இப்பண உள் வருகைக்கு பெருந்தொகையான பயிற்றப்பட்ட, ஓரளவு பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிந்தமையும் அவர்கள் அத்தகைய வருவாய்களை அனுப்பி வைப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்ட பெரும் ஊக்குவிப்புகளும் காரணமாக அமைந்தன. ஐக்கிய இராச்சிய ஸ்டேர்லிங் பவுண், ஐக்கிய அமெரிக்க டொலர், டியூச் மார்க்கு, சுவிசு பிராங் ஆகிய குறிப்பிடப்பட்ட நான்கு முதன்மை வெளிநாட்டு நாணயங்களில் ஏதேனும் ஒன்றில் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக்கணக்குகளை வைத்திருப்பதற்கும் இலங்கை திரும்பிய நாளில் இருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அத்தகைய வதிவற்றோர் வெளிநாட்டுக் கணக்குகளைப் பேணுவதற்கான வாய்ப்பளித்தல், அத்தகைய வாய்ப்புகளுக்கு வெளிநாட்டு நாணயங்களில் வட்டியளித்தல், வெளிநாடுகளில் தங்கியிருந்த காலப்பகுதியில் வைப்பிலிடப்பட்ட தொகைக்கும், இலங்கை திரும்பிய நாளிலிருந்து மேலும் பத்து ஆண்டுகளுக்கு அத்தொகைகளுக்குச் சொத்து வரியிலிருந்து விலக்களித்தல், கணக்கு வைத்திருப்போர் இலங்கைக்கு நிலையாக குடியிருப்பாளராகத் திரும்பிவரும் வரையில் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயங்களிலிருந்தான வட்டி வருமானத்திற்குவருமான வரியிலிருந்து விலக்களித்தல், மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருக்கும் நிதியினை எத்தகைய கட்டுப்பாடுகளும்இன்றி, செலவிட ஒப்புதல் அளித்தல் என்பன வழங்கப்பட்ட பெரும் ஊக்குவிப்புக்களாகும். மேலும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்போர் அவர்கள் இலங்கை ரூபாவிலோ அன்றி வெளிநாட்டு நாணயத்திலோ பெற்றுக்கொள்வார்கள் என்பதைக் கருத்தில் எடுக்காது வங்கி முற்பணங்களைப் பெற அனுமதியளிக்கப்பட்டனர்.

வெளிநாட்டு அரசுஅல்லது வெளிநாட்டுக் கொடை வழங்கும் நிறுவனங்களிலிருந்தான அலுவல்சார் மாற்றல்கள் அல்லது மொத்த கொடை வழங்கீடுகள் 1980இல் ரூ.22,810 இலட்சமாக (சிஎஉ1,060 இலட்சம்) அமைந்து 1979ஆம் ஆண்டில் பெறப்பட்ட சிஎஉ1,110 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து சிஎஉ நியதிகளில் சிறிதளவு வீழ்ச்சியைக்கொண்டு விளங்கியது. இத்தொகையில் மா, வளமாக்கி போன்றவற்றை உள்ளடக்கிய பண்டமாற்றல் உணவு உதவி கீழான கொடை வழங்கீடுகள் ரூ. 5,400 இலட்சமாக (சிஎஉ 250 இலட்சம்)வும், செயற்றிட்ட உதவியின் கீழ் கொடைகள், ரூ.16,360இலட்சமாகவும் (சிஎஉ 760 இலட்சம்), ப. நா. நியால் தங்க விற்பனையிலிருந்தான இலாபம் உள்ளடக்கப்பட்ட ஏனைய அலுவல்சார் உதவு பெறுகைகள் ரூ.1,050 இலட்சமாகவும் (சிஎஉ 50 இலட்சம்) விளங்கின.

1979ஆம்ஆண்டின் ரூ.33,060இலட்சம்(சிஎஉ 1,640 இலட்சம்) கொண்ட தேறிய பெறுகைகளுடன் ஒப்பிடுகையில் 1980இல் மூலதனக் கணக்கின் நாணயமற்ற துறையில் தனியார் அலுவல்சார் மூலதனப் பாய்ச்சல்களின் தேறிய பெறுகை ரூ. 74,460

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுகள்




இலங்கை மத்திய வங்கி

இலட்சமாக (சிஎஉ 3,460 இலட்சம்) காணப்பட்டது. அதிகரிப்பின் பெரும்பகுதி வெளிநாடுகளிலிருந்தான நேரடி முதலீடுகளின் பெருமளவு அதிகரிப்பின் மூலமாக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவிற்குட்பட்ட முதலீடுகளின் வருகையால் கிடைக்கக்கூடியதாயிருந்தது. அத்தகைய முதலீடுகள் ரூ.5160 இலட்சத்திற்கு (சிஎஉ 240 இலட்சம்) வகைகூறிய வேளையில் கட்டற்ற வர்த்தக வலயத்திற்கு வெளியேயுள்ள கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களால் பெறப்பட்ட நேரடி முதலீடுகள் ரூ. 1940 இலட்சத்திற்கு (சிஎஉ 90 இலட்சம்) வகைகூறியது. இதுவரையில் காணப்படாத அளவிற்கு மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் செயற்றிட்டங்களுக்கான தனியாரின் வர்த்தக நிதியிடலின் தோற்றமே இலங்கையின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். போக்குவரத்தான எயர் லங்கா, கப்பற் கூட்டுத்தாபனம் போன்ற பெரும் நிறுவனங்கள் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்தினை நிதிப்படுத்துவதற்காக வர்த்தகக் கொடுகடன்களை நாடின. பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், கணிசமான அளவு மசகு எண்ணெய், ஏனைய பெற்றோலிய உற்பத்தி ஆகியவற்றை இறக்குமதிசெய்வதற்காக நிதிப்படுத்தலைப் பெறும் நோக்குடன் ஏற்புகொடுகடன் வசதிகளின் வடிவில் குறுங்கால வர்த்தகக் கடனை நாடியது.

1980இல் நடைமுறைக் கணக்குக் குறையின் கணிசமானதொரு பகுதி அலுவல்சார் உதவிகளின் பாய்ச்சலால் நிதிப்படுத்தப்பட்டது. பண்ட உணவு செயற்றிட்ட உதவிகளின் கீழ் கடன் பெறுகைகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 500 இலட்சம் (இலங்கை ரூபாய் 8970 இலட்சம்) கொண்ட முதலாவது யூரோ டொலர் கடன் பெறுகை உட்பட மொத்த அலுவல்சார் மூலதனப் பாய்ச்சல் ரூ. 43,250 இலட்சமாக (சிஎஉ 2010 இலட்சம்) விளங்கின.

உதவியிலிருந்தான பெறுகைகள் தவிர்ந்த, ஏனைய அலுவல்சார் பெறுகைகள் பன்னாட்டு நாணய நிதியத்தினால் நடாத்தப்பட்ட தங்க விற்பனையிலிருந்தான வருவாய்களின் மூலம் பெறப்பட்ட பொறுப்பாண்மை நிதியக் கடன் தொகையான ரூ. 5,380 இலட்சத் (சிஎஉ 250 இலட்சம்) தினையும் உள்ளடக்கும். 1979 ஒகத்தில் கைச்சாத்திடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 500 இலட்சத்துக்கான யூரோ டொலர் கடனும் 1980 இன் பிற்பகுதியில் பெறப்பட்டது.

1980 இல் பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் சிஎஉ 300 இலட்சம்கொண்ட (ரூ.6,300 இலட்சம்) கொள்வனவுகளையும், (எடுப்பனவுகள்) சிஎஉ 430 இலட்சங்கொண்ட (ரூ. 7,490 இலட்சம்) மீள் கொள்வனவுகளையும் விளைவித்தது. 1980 யூனில் எடுப்பனவு செய்யப்பட்ட சிஎஉ 300 இலட்சம் நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிவசதி உடன்படிக்கையின் கீழான மூன்றாவது பெறுகையாகும். நான்காவது அடிப்படை காலப்பகுதிக்கான நிதியத்தின் சிஎஉ ஒதுக்கீடுகளின் கீழ் ரூ. 2,580 இலட்சத்திற்குச் சமமான (சிஎஉ 120 இலட்சம்) ஒதுக்கீடு ஒன்றும் பெறப்பட்டது.

1980 இல் மொத்தத் தேறிய அடிப்படையிலான இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் மிகக் கூடுதலான வீழ்ச்சியொன்றைக் காட்டின. மொத்தச் சொத்துக்கள் ரூ. 28,860 இலட்சத்தால் (சிஎஉ 1,790 இலட்சத்தால்) வீழ்ச்சியுற்றன. இது, 1975 இலிருந்து வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட முதலாவது வீழ்ச்சியாகும். ஆண்டின் தொடக்கத்தில் என்றுமில்லாத வகையில் ரூ.96,520 இலட்சமாக (சிஎஉ 4,750 இலட்சம்) உயர்ந்து விளங்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆண்டினிறுதியில் ரூ. 67,660 இலட்சமாக (சிஎஉ 2,960 இலட்சம்) குறைந்ததொரு மட்டத்திற்கு வீழ்ச்சியுற்றது. ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்கள் 1980ஆம் ஆண்டுக்கான ஏறக்குறைய 3½ மாத இறக்குமதிகளுக்கு நிதிப்படுத்தப்போதுமானதாக மதிப்பிடப்பட்டதாயினும் ஆண்டின் இறுதியில் மொத்த ஒதுக்குகள் இரண்டு மாத இறக்குமதிகளை நிதிப்படுத்துவதற்கு மாத்திரம் போதுமான அளவிற்கு வீழ்ச்சியுற்றன. 1981இல் மதிப்பிடப்பட்ட இறக்குமதிகளுக்கு நிதிப்படுத்துவதற்குத் தேவையான ஒதுக்குகளின் போதிய தன்மையை நோக்குமிடத்து வெளிநாட்டுச் செலாவணியில் காணப்பட்ட நெருக்கடியான நிலை மிகவும் தெளிவாகத் தென்பட்டது.

## செலாவணி வீதங்கள்

*1977 நவெம்பர் 16ம் நாள் தொடக்கம் மொத்தச் சதவீத மாற்றங்கள்*




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.29

## வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளியை நிதியீட்டல் 1978 — 1980

| வகைகள் | ரூபா பத்து இலட்சம் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1980 | 1978 | 1979 | 1980 |
| 1. வெளிநாட்டு வருவாய்கள் ... | 15,709 | 19,210 | 24,830 | 805 | 954 | 1,154 |
| 1.1 எற்றுமதிகள் .. | 13,207 | 15,282 | 17,711 | 675 | 759 | 823 |
| 1.2 பணிகள் ... | 1,942 | 2,993 | 4,605 | 99 | 149 | 214 |
| 1.3 தனியார் மாற்றல்கள் ... | 610 | 935 | 2,514 | 31 | 46 | 117 |
| 2. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ... | 19,807 | 26,765 | 42,501 | 1,035 | 1,330 | 2,004 |
| 2.1 இறக்குமதிகள் ... | 15,600 | 22,570 | 33,851 | 819 | 1,121 | 1,573 |
| 2.2 பணிகள் . | 1,823 | 2,253 | 3,745 | 93 | 112 | 174 |
| 2.3 தனியார் மாற்றல்கள் .. | 268 | 182 | 248 | 14 | 9 | 12 |
| 2.4 மூலதன மீளக்கொடுப்பனவுகள் ... | 2,116 | 1,760 | 4,657 | 109 | 88 | 245 |
| 3. வெளிநாட்டு மூலவள இடைவெளி ... | — 4,048 | — 7,555 | —17,671 | — 230 | — 375 | 850 |
| 4. மூலவள இடைவெளியினை நிதியிடல் ... | + 4,048 | + 7,555 | +17,671 | + 230 | + 375 | — 850 |
| 4.1 நீண்டகால கடன்கள் .. | 3,680 | 2,903 | 4,143 | 188 | 144 | 193 |
| 4.2 நன்கொடைகள் ... | 900 | 2,239 | 2,281 | 46 | 111 | 106 |
| 4.3 நிரம்பலர் கொடுகடன் .. | 8 | 609 | 1,173 | — | 30 | 55 |
| 4.4 குறுகியகால கொடுகடன் ... | 114 | 41 | 4,820 | 6 | 2 | 224 |
| 4.5 வங்கிக் கொடுகடன்கள் ... | — | — | 361 | — | — | 16 |
| 4.6 இருபுடை நிலுவைகள் ... | — | 413 | — | — | 20 | — |
| 4.7 ப.நா.நி. எடுப்பனவுகள் . | 756 | 1,834 | 622 | 38 | 91 | 30 |
| 4.8 நேரடி முதலீடு .. | 23 | 769 | 753 | 1 | 46 | 35 |
| 4.9 வெளிநாட்டுச் சொத்துக்கள் .. | — 1,904 | — 2,175 | 2,886 | — 65 | — 107 | 179 |
| 4.10 இ. எ. உ. ஒதுக்கீடு ... | — | 242 | 258 | — | 12 | 12 |
| 4.11 ஏனைய .. | 177 | 120 | 147 | 9 | 6 | 5 |
| 5. பெறுமதிச் சீராக்கங்கள் (ஆ) ... | 344 | — 18 | 919 | — | — | — |
| 6. பிழைகளும் தவிர்ப்புகளும் .. | — 50 | + 820 | — 700 | + 7 | + 35 | — 4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) செயற்றிட்ட உதவி, பண்ட உதவி, பொறுப்பாண்மை நிதியக்கடன்கள், 1980இல் யூரோ டொலர் கடனின் கீழான எடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட சீராக்கங்களின் பின்பு வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூபாய் பெறுமதி.

அலுவல்சார்பான உதவி வரவுகளின் குறிப்பிடத்தக்க பண்பு, 1979க்கான உதவிப் பொறுப்புக்களிலும் பார்க்க ஆண்டுத் தொடக்கத்தில் இவ்வுதவிப் பொறுப்புக்கள் உயர்வாயிருந்தபோதிலும் 1980க்கான உதவிப் பொறுப்புக்கள் 6430 இலட்சம் ஐ. அ. டொலர்களாக எந்த ஒரு கலண்டர் ஆண்டிலும் பார்க்க உயர்வாகவும், உண்மையான உதவிப் பயன்பாடு ரூ. 26,900 இலட்சமாக (சிஎஉ 1,250 இலட்சம்) 1979க்கான உதவிப் பயன்பாட்டு எண் தொகையான சிஎஉ 1,320 இலட்சத்திலும் பார்க்கக் குறைவாகவும் காணப்பட்டமையாகும்.

1980 இன் அபிவிருத்திகளில் காணப்பட்ட மற்றுமொரு முக்கியமான அம்சம் யாதெனில் அனைத்து முதன்மை வெளிநாட்டு நாணயங்களையொட்டி மத்திய வங்கியினால் இலங்கை ரூபாவிற்கான மாற்றுவீதங்கள் தீர்மானிக்கப்பட்ட குறிப்பாக ஆறு முதன்மை நாணயங்களுக்கு எதிராக பெரும் அளவில் ரூபா ஸ்டேர்லிங் பவுணுக்கு எதிராக 19.6 சதவீதத்தாலும், ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 13. 9 சதவீதத்தாலும், யப்பானிய யென்னுக்கு எதிராக 25.3 சத வீதத்தாலும், டியூச் மார்க்கிற்கு எதிராக 2.6 சதவீதத்தாலும், பிரான்சிய பிராங்கிற்கு எதிராக 3.0 சதவீதத்தாலும் இந்திய ரூபாய்க்கு எதிராக 15.4 சதவீதத்தாலும் பெறுமதியில் வீழ்ச்சியுற்றது. சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதிக்கு எதிராக இலங்கை ரூபாய் 10. 8 சதவீதத்தால் பெறுமதியில் குறைவடைந்தது.

## வெளிநாட்டுக் கடனும் தீர்ப்பனவும்

பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் வெளிநாடுகளிலிருந்தான கடன்பாடுகள், அரசதுறையின் நிரம்பலர் கொடுகடன்கள், உள்ளடக்கப்பட்ட வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன், ரூ. 158,410 இலட்சத்திலிருந்து (சிஎஉ 7,780 இலட்சம்) 1980 இல் ரூ. 225,960 இலட்சமாக (சிஎஉ 9,870 இலட்சம்) 27 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1979இன் 6 சதவீதத்தினைக்கொண்டதொரு அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது.

வெளிநின்ற கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, பண்ட, செயற்றிட்டக் கடன்கள் பொறுப்பாண்மை நிதியக்கடன்கள், ஐ. அ. டொலர் 500 இலட்சம் கொண்ட (ரூ. 8,970 இலட்சம்) யூரோ டொலர்க் கடன் ஆகியவற்றைப் பெருமளவில் உள்ளடக்கிய நீண்டகால கடன்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள் பெரிதும் காரணமாகும். 1980 இறுதியில் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்தான கடன்படுகைகள் 1979இன் ரூ. 690 இலட்சத்திலிருந்து (சிஎஉ 40 இலட்சம்) ரூ. 4,290 இலட்சமாக (சிஎஉ 190 இலட்சம்) அதிகரித்தது. மறுபுறத்தில், இவ்வாண்டுக்காலத்தில் அரசதுறை நிரம்பலர் கொடுகடன்களின் வெளிநிற்கும் படுகடன் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

மற்றும் மூலதன வட்டிக்கொடுப்பனவுகள், நிரம்பலர் கொடுகடன்கள், மீளக்கொள்வனவு (மீளக்கொடுப்பனவு) பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பணிக்கட்டணங்கள் உள்ளிட்ட கடன் தீர்ப்பனவும் 1979இல் ரூ. 23,830 இலட்சத்திருந்து (சிஎஉ 1,180 இலட்சம்) 1980இல் ரூ.27,630 இலட்சமாக (சிஎஉ 1,370இலட்சம்)அதிகரித்தது. கடன்தீர்ப்பனவு 16 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டபோதிலும் கடன் தீர்ப்பனவு வீதமானது 1979 இன் 13.0 சதவீதத்திலிருந்து 1980 இல் 12.4 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இதற்குப் பண்ட ஏற்றுமதிப் பணிகள் மீதான அதிகரித்த வருவாய் காரணமாக இருந்ததுடன், இவை 1979 இன் ரூ. 182,750 இலட்சத் (சிஎஉ 9080 இலட்சம்) துடன் ஒப்பிடுகையில் 1980இல் ரூ. 223,160 இலட்சமாக (சிஎஉ 10,370 இலட்சம்)விளங்கி வெளிநாட்டுச்செலாவணி உழைப்பில் 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்து நின்றது. 1980இல் கடன் தீர்ப்பனவு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணியாக இறக்குமதிகளின் நிதிப்படுத்தல் கருவியாக குறுங்கால வர்த்தக கொடுகடன்கள் மீளத் தோற்றியமை விளங்கியது. 1980 இல் எண்ணெய் இறக்குமதியில் கணிசமானதொரு பகுதி குறுங்கால வர்த்தக கொடுகடன்களாலேயே நிதிப் படுத்தப்பட்டது. இவை மிகக் குறுகிய காலத்தன்மையுடையவையாகக் காணப்பட்டமையால் கடன் தீர்ப்பனவின் கீழ் பிரதிபலிக்கவில்லை. மேலும் அண்மைக்காலத்தில் நீண்டகாலக் கடன்களின் கால எல்லை நீண்ட சலுகைக்கால வசதிகளுடனும் நன்மை மிக்க கடப்பாடுகளுடனும் அமைந்திருந்தமை மற்றுமொரு காரணமாகும்.

## அட்டவணை 1.30

## வெளிநின்ற வெளிநாட்டுப் கடன்களும் (அ) கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் 1976-1980(ஆ)

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| | 1976 | 1977 | 1978 | 1979(இ) | 1980(ஈ) |
|---|---|---|---|---|---|
| 1. நீண்டகாலக் கடன்(உ) ... | 4,967.8<br>(484.4) | 10,593.5<br>(560.5) | 14.811.3<br>(732.1) | 15,840.6<br>(778.0) | 22,596.0<br>(986.7) |
| 2. நிரம்பலர் கொடுகடன்கள் ... ... | 632.8<br>(61.7) | 963.2<br>(51.0) | 991.4<br>(49.0) | 828.6<br>(40.7) | 787.6<br>(36.6) |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் ... ... | 916.5<br>(89.4) | 1,212.3<br>(64.1) | 1,548.2<br>(79.4) | 2,501.3<br>(126.2) | 2,335.1<br>(112.6) |
| 4. வங்கிக் கடன்பாடுகள் ... ... | 308.9<br>(30.1) | 552.3<br>(29.2) | 155.1<br>(7.7) | 69.1<br>(3.4) | 428.6<br>(18.7) |
| வெளிநின்ற மொத்த கடன்(ஆ) ... | 6,826.0<br>(665.6) | 13,321 3<br>(704.8) | 17,506.0<br>(878.2) | 19,239.6<br>(948.3) | 26,147.3<br>(1,154.6) |
| 1. கடன்தீர் கொடுப்பனவுகள் ... | 1,073.5<br>(110.3) | 1,211.9<br>(116.3) | 2,347.2<br>(119.8) | 2,383.1<br>(118.4) | 2,762.8<br>(137.0) |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 883.5<br>(90.8) | 966.9<br>(92.8) | 1,862.4<br>(95.1) | 1,627.4<br>(80.8) | 1,781.5<br>(91.4) |
| (ப.நா. நிதியத்திற்கு) | 189.9<br>(19.5) | 219.2<br>(21.0) | 440.4<br>(22.5) | 622.6<br>(30.9) | 748.5<br>(43.4) |
| 1.2 வட்டி ... ... ... | 190.0<br>(19.5) | 245.0<br>(23.5) | 484.8<br>(24.7) | 755.7<br>(37.5) | 981.3<br>(45.6) |
| (ப.நா. நிதியத்திற்கு) | 67.5<br>(6.9) | 73.2<br>(7.0) | 154.4<br>(7.9) | 170.0<br>(8.4) | 345.6<br>(12.4) |
| 2. பண்ட ஏற்றுமதிகள் பணிகளிலிருந்து கிடைத்த வருவாய்கள் ... | 5,349.9<br>(550.0) | 7,563.2<br>(725.8) | 15,148.8<br>(773.7) | 18,274.7<br>(907.7) | 22,316.3<br>(1,037.0) |
| 3. கடன் தீர்ப்பனவு விகிதம் (2இன் சத வீதமாக 1) ... ... ... | 20.1 | 16.0 | 15.5 | 13.0 | 12.4 |
| 4. கடன் தீர்ப்பனவு விகிதம் (ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக) ... | 15.3 | 12.2 | 11.6 | 8.7 | 7.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களை தவிர்க்கிறது.

(ஆ) வெளிநிற்கும் வெளிநாட்டுக் கடன் எண் தொகைகள் ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ள வேளையில் கடன் தீர் கொடுப்பனவுகள் வணிகப்பண்ட ஏற்றுமதிகள், பணிகள் ஆகியவற்றின் தரவு மாற்றங்களின் பொருட்டு சராசரி பயன்படுத்தப்பட்டது.

(இ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஈ) தற்காலிகம்.

(உ) 1980இல் பெறப்பட்ட யூரோ டொலர் கடன் உட்பட பண்டக் கடன்கள், செயற்றிட்டக் கடன்கள், பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ஏனைய கடன்களை உள்ளடக்குகிறது.